# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.31/2020

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. கலா (DW–1 ) | வயது | : | 56 /2025 |
| த/க பெயர் | : | திரு. இன்பமணி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | கெழுவத்தூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்ன பரிகாரம் வேண்டி வாதி சண்முகசுந்தரம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நிலத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து மன்னார்குடி தாலுக்கா, கெழுவத்தூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் ஞாபகம் இல்லை, விஸ்தீரணம் 130 குழி. எனது எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்தின் விஸ்தீரணம் 150 குழி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.
2) தாவா சொத்து ஆதியில் கலியபெருமாளுக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை யாரிடமிருந்து எனது கணவர் வாங்கினார் என்றால் கலியபெருமாள் தேவரிடமிருந்து 150 குழிக்கு காசு வாங்கி கொண்டு பத்திரத்தில் 150 குழி என்று குறிப்பிட்டுள்ளது என்று பணம் வாங்கிகொண்டார்.
3) 20.07.1975 இல் எனது கணவர் கலியபெருமாளிடமிருந்து 1 ஏக்கர் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். அதுபோல் எனது கணவரின் சகோதரர் ஞானசேகர் கலியபெருமாளிடமிருந்து 1 ஏக்கர் கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். மீதமுள்ள 44 செண்ட் எனது கணவரும் அவரது சகோதரர் ஞானசேகரும் கலியபெருமாளிடமிருந்து கிரயம் வாங்கவில்லை என்றால் சரிதான். அந்த 44 செண்ட் சொத்துக்காக தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறு.

4) 1991 அம் வருடம் எனது கணவர் கிரயம் பெற்ற தேதி, மாதம் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. வெண்ணிலை கிரய பத்திரம் கொடுத்தாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் எனது கணவரின் சொத்தும் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் எனது கணவரின் சொத்து இருப்பதால் தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. வெண்ணிலை கிரய பத்திரம் மூலம் தாவா சொத்தை கிரயம் பெற்ற நாங்கள் கலியபெருமாள் உயிருடன் இருந்தபோதோ அல்லது அவரது வாரிசுதாரர்களிடமோ தாவா சொத்தை கிரயம் எழுதி தர கேட்டேனா என்றால் கேட்டேன். எப்போது கேட்டேன் என்றால் 24 வருடங்கள் முன்பு கேட்டேன். கிரயம் எழுதி தராததால் வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது நீதிமன்றத்தில் வழக்கோ தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

5) பஞ்சாயத்து தலைவர் மூலம் என்ன பேசினோம் என்றால் கலியபெருமாளிடம் மீதமுள்ள சொத்தை பெற்றுக் கொண்டு பணம் தரும்படி பஞ்சாயத்து பேசினார்கள். அதன்படி நாங்களும் பணம் கொடுத்தோம். அதற்கு எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. எனது கணவர் இருக்கும்போது சொத்து வேண்டி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்குதான் தாவா சொத்து குறித்து எல்லா விபரங்களும் தெரியவரும் என்றால் சரிதான். கலியபெருமாள் இறந்த பின்புதான் எனது கணவர் இறந்தார் என்றால் சரிதான். எனது கணவர் கலியபெருமாளிடமிருந்து சொத்து கேட்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் உயிருடன் இருக்கும்போது தாவா சொத்து தொடர்பாக எந்த வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பின்பு சொத்துக்காக சண்டை ஏற்பட்டது என்றால் சரிதான்.

6) எனது எதிர்வழக்குரையிலும் நிரூபணவாக்குமூலத்திலும் தாவா சொத்து தனக்கு எழுதி தரவேண்டும் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 44 செண்ட் நிலத்தை எனது கணவர் கிரயம் வாங்கியதற்கான எந்தவித ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

**வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.18 17:03:14 +0530

District Munsif

Mannargudi.